# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018–ம் ஆண்டு ஜுலை மாதம் 10–ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**மன்றபொருள் 1.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண். TN-31/F8655 Dumper plazer வாகனம் தகுதி சான்று (FC) பெற அனுப்பப்பட்டுள்ளது. அப்போது வண்டியின் ஹைட்ராலிக் ஆயில் அதன் தன்மையை இழந்துவிட்டபடியால் புதிய ஹைட்ராலிக் ஆயில் மாற்ற வேண்டும் என தெரியவருவதால் ஆகும் கூடுதல் செலவினம் ரூ.19,400/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1712/2018/எச்1

**தீர்மான எண் :145 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் 2.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண் TN-31/ B 9525 TATA 407 வாகனம் 27.07.2018 முதல் தகுதி சான்று(FC) பெற வேண்டியுள்ளதால் அதிலுள்ள பழுதுகளை நீக்கி தகுதி சான்று பெறாகும் தோராய செலவினம் ரூ.92,000/–ம் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2739/2018/எச்1

**தீர்மான எண் :146 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் 3.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN -31/ AH 6642 TATA ACE வாகனத்திற்கு என்ற டிப்பர் லாரிக்கு 28.06.2018 வரை தகுதி சான்று முடியுற்றதால், 29.06.2018 முதல் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வட்டார போக்குவரத்து அலுவலகம் , கடலூர் தகுதி சான்று (FC) பெற நகர மன்றத் தீர்மான எண்.134 நாள். 29.06.2018ன் படி, 06.07.2018 தேதியன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட அரசு பதிவுபெற்ற நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் விலாசம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | JOTHI DIESEL PUMP ENGINEERING<br>L4,INDUSTRIAL ESTATE<br>SEMMANDALAM CUDDALORE-1 | 50.000/– |
| 2 | ANNAI DIESEL PUMP ENGINEERING<br>NO.47,TELC COMPLEX<br>PONDY ROAD, SEMMANDALAM CUDDALORE-1 | 53,650/– |

**அலுவலகக் குறிப்பு:**

1.வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்1ல் கண்டுள்ள JOTHI DIESEL PUMP ENGINEERING,L4,INDUSTRIALESTATE SEMMANDALAM CUDDALORE-1 நெல்லிக்குப்பம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்நதப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்

2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம் .

ந.க.எண். 1713 /2018/எச்1

**தீர்மான எண் :147 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள் 4.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN-31/AH 6556 என்ற TATA ACE 28.06.2018 வரை தகுதி சான்று முடியுற்றதால், 29.06.2018 முதல் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கடலூர் தகுதி சான்று (FC) பெற நகர மன்றத் தீர்மான எண்.126 நாள்.11.06.2018ன்படி, 06.07.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட அரசு பதிவுபெற்ற நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் விலாசம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், 13, மெயின்ரோடு, கடலூர் | 44,700/— |
| 2 | வினாயகா ஆட்டோகேரேஜ்,<br>48,ஜெயராம் நகர் , வில்வராய நகர், கடலூர்.1 | 46,200/— |

அலுவலக குறிப்பு —1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், கடலூர் நிறுவனம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி செய்திட , பணி உத்திரவு வழங்கியதை மன்ற அங்கீகரிக்கலாம்

ந.க.எண். 2344/2018/எச்1

**தீர்மான எண் :148 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள் 5.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர். அம்பேத்கார் பேருந்து நிலைய கடைகளுக்கு கடை எண். 4, 8 மற்றும் 9 கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.07.2018 அன்று கோரப்பட்டதில், கடை எண். 4க்கு மட்டும் கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி** | **உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக்கேள்வி** |
|---|---|---|
| 1 | திரு.எம்.செந்தாமரைக்கண்ணன்<br>ஒப்பந்ததாரர்,<br>7/13, புதுத்தெரு, மேல்பாதி,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,250/— |
| 2 | திரு.எம்.இமாம் ஜாபர் சாதிக்<br>த/பெ முகம்மது தாகித்,<br>348, கே.எஸ்.ஏ.ஆர் ரோடு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,225/— |

அலுவலக குறிப்பு :வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் கடை எண். 4க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.468/2006/அ1

**தீர்மான எண் :149 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள் 6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான பி.ஏ.எச் சாலையில் உள்ள தினசரி மார்க்கெட்டில் புதியதாக கட்டுப்பட்டுள்ள தரை கடை எண். 2 முதல் 10 வரை ஆகிய பத்து கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.07.2018 அன்று கோரப்பட்டதில், கடை எண். 2க்கு மட்டும் கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.எச்.நஜிர் அகமது த/பெ ஹனீபா<br>397, கே.எஸ்.ஏ.ஆர் ரோடு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.800/– |
| 2 | திரு.என்.ஏ.முஜ்ஜிமில்<br>397, கே.எஸ்.ஏ.ஆர் ரோடு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.700/– |

அலுவலக குறிப்பு : வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் கடை எண். 2க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம்அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.468/2006/அ1</u>
**<u>தீர்மான எண் :150 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள் 7.</u>** நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் ந.க.எண். 1942/2018/வி.ம. நாள். 30.05.2018ல் வரப்பெற்ற உத்திரவில் வார்டு–A, பிளாக்–26, நகரளவை எண்–28/3, 29/3, 1.45 ஏக்கர் (அ) 63162.00 சதுரடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ. (வி.ம) எண் 479/2018 (R) என மனைப்பிரிவு வரன்முறை செய்து வரப்பெற்றள்ளது. இதில் உள்ள சாலை, பூங்கா மன்றம் ஏற்றுக் கொள்ளவும், மன்றத்தில் பதியவும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வான்பாக்கம் கிராமம் வார்டு–A, பிளாக்–26, நகரளவு எண் 28/3, 29/3, பரப்பு 1.45 ஏக்கர் (அ) 63162 சதுரடி இடத்தில் 43 மகைளுக்கு கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ.இ (வி.ம) எண் 479/2018 (R) என ஒப்புதல் செய்து வரப்பெற்றுள்ளது. இதில் உள்ள சாலைகள், பூங்கா இடத்தின் உள்ளாட்சி தன்னிச்சையாக பெற வேண்டியது என தெரிவித்துள்ளதால் மன்றத்தில் பதிவு செய்யலாம். மேலும், சாலை, பூங்காவினை உடன் ரூ.100/–முத்திரை தாளில் பதிவு செய்து கொடுத்தால் ஏற்கலாம்.

**<u>ந.க.எண்.2486/2018/எப்1</u>**
**<u>தீர்மான எண் :151 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது .</u>**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.